07.11.2025

O.S.No. 88/2020

DW1- Raj – S/o. Manuvel

07.11.2025.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( வாதி தரப்பில்)

35. என்னிடம் காண்பிக்கப்படுவது அ.வ.541/2009 வழக்கின் திருத்தப்பட்ட தீர்ப்பாணை நகல் என்றால் சரிதான். திருத்தப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 44 ஆக பி.வா.சா.ஆ.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.44 ன் பேரில் நான் மேல்முறையீடு செய்துள்ளேன்.

36. நான் வழக்கு பிராதில் கோரியுள்ள பரிகாரங்களை படித்து பார்த்தேன் என்றால் சரிதான்.

37. வழக்கு 2 வது தபசில் சொத்தின் 1 வது அயிட்ட சொத்தின் கதவு எண்.1/88(1) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது தவறானதாகும்.

38. கதவு எண்.1/88(1) வரி விதிப்பானது 4 ம் வாதியான கோவில் பேரில் உள்ளது என்றால் இல்லை.

39. வழக்கில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களின் விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

40. வா.சா.ஆ.4 ஆவணமானது 4 ம் வாதி பெயரில் உள்ள வரிவிதிப்பு ஆவணம் என்றால் சரிதான். ஆனால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது.

41. 2ம் தபசில் 1வது அயிட்ட சொத்தில் உள்ள கட்டிடத்தின் மின் இணைப்பு எண்.0840041822 என்றால் தெரியாது. வழக்கிற்காக கோவில் பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 37 ஆவணமானது 4ம் வாதி பெயரில் உள்ள மின் இணைப்பு கட்டண ரசீது என்றால் சரிதான். ஆனால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது.

42. பிராதுடன் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தில் ABJK என்ற பகுதி 2வது தபசில் 1வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது.

43. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு வடபக்கம் 2வது தபசில் 2வது அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரியல்ல முழு சொத்தையும் நான் கிரையம் வாங்கியுள்ளேன்.

44. 2வது தபசில் 2வது அயிட்டமானது 2 எடுப்பாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் ஸ்தலத்தில் அவ்வாறு இல்லை.

45. 2வது 2வது அயிட்டத்தில் 1வது எடுப்பு BCIH என உத்தேச வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் ஸ்தலத்தில் அவ்வாறு இல்லை.

46. 2வது 2வது அயிட்டத்தில் 2 வது எடுப்பு HGKJ என உத்தேச வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் ஸ்தலத்தில் அவ்வாறு இல்லை.

47. 2வது தபசில் 2வது அயிட்டமானது 8.01 சென்ட் விஸ்தீரணம் கொண்டது என்றால் ஸ்தலத்தில் இல்லை. ஒரே சொத்தாக உள்ளது.

48. 2வது தபசில் 2வது அயிட்ட சொத்தினை 1 முதல் 3 வாதிகள் 4ம் வாதி பெயரில் அ.வ.541/2009 திருத்தப்பட்ட தீர்ப்பாணைக்கு பின் 25.06.2025 தேதியில் கிரைய ஆவண பதிவு செய்துள்ளார் என்றால் இல்லை. நாளது வரை எந்த கிரையமும் நடைபெறவில்லை.

49. அ.வ.541/2009 வழக்கின் திருத்தப்பட்ட தீர்ப்பாணைக்கு பின் நான் 2ம் பிரதிவாதியை தூண்டிவிட்டு 2ம் பிரதிவாதி வாதி என்ற கோதாவில் அ.வ.221/2025 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

50. 25.06.2025 தேதியில் கிரைய ஆவணத்திற்காக 05.11.2019ம் வருடம் 1 முதல் 3 வாதிகள் 4ம் வாதி பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார்கள் என்றால் அது மோசடியான கிரைய ஆவணம்.

51. 14.06.2019ம் தேதி நான் சந்திராவிற்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அடிமுதலே செல்லாது என்றால் சரியல்ல.

52. கூடுதல் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.224/2019 வழக்கிற்கு பின்னிட்டு தான் நான் சந்திராவிற்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கானது 2019ம் வருடம் மே மாதம் விடுமுறை நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் விடுமுறை நீதிமன்றத்தில் எனது வழக்கறிஞரை வைத்து எதிர்

உரை தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு நினைவில்லை.

53. உத்தேச வரைபடத்தில்கண்ட என் கிரையத்திற்கு உட்பட்ட FE பகுதி மட்டுமே சுற்றுசுவர் கட்டிவந்தேன் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் கிழமேல் தெருவில் கிழமேலாக கட்டியுள்ளேன்.

54. FE பகுதியில் சுற்றுசுவர் கட்டிய நான் விடுமுறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலான பின் A பகுதி வரை ஆக்கிரமிப்பு செய்து சுற்றுசுவர் கட்டினேன் என்றால் சரியல்ல. அதனால் 1 முதல் 3 வாதிகள் சாம்பவர் வடகரை காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் இல்லை.

55. 4ம் வாதி கோவிலில் வழிபடக்கூடியவர்களை கோமரத்தான் என்று அழைப்பார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

56. 4ம் வாதி கோவில் மூலவர் சன்னதி திருவேங்கடம் அருகே உள்ள கரிசல்குளம் ஊரில் உள்ளது என்றால் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

57. மகா சிவராத்திரி அன்று கோமரத்தார்கள் அனைவரும் கரிசல்குளம் ஊரில் உள்ள கோவிலில் வழிபடுவார்கள் என்றால் நான் கேள்விபட்டுள்ளேன்.

58. கோமரத்தார்கள் பல நாடுகளில் வசிப்பவர்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அனைவரும் வெளிநாட்டில் இருந்து மகா

சிவராத்திரி அன்று வருவார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

59. 18.02.2020 முதல் 22.02.2020 வரை மகா சிவராத்திரி விழா நடப்பதால் கோமரத்தார்கள் அனைவரும் கரிசல்குளம் கோவிலில் இருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த நேரத்தில் நான் வா.சா.ஆ.27 ஆவணம் உத்தேச வரைபடத்தில் கண்ட GKA பகுதியில் ஹாலோபிளாக் கற்களை வைத்து 10 அடி உயரத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து வழிப்பாதையை அடைத்தேன் என்றால் சரியல்ல.

60. நான் கோவில் வாசலை அடைத்ததால் கோமரத்தார்கள் 2 வது தபசில் சொத்தில் உள்ள கோவிலுக்கு செல்லமுடியவில்லை என்றால் சரியல்ல கோவிலே அங்கு இல்லை.

61. நான் ஆக்கிரமித்த பகுதி 3 ம் தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

62. 23.02.2020 ம் தேதி கரிசல்குளத்தில் இருந்து கோமரத்தார்கள் ஊர் திரும்பிய போது தான் ஆக்கிரமிப்பு விவரம் தெரிந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

63. நான் கட்டிடம் கட்டும் வேலை அனைத்தும் இரவு நேரத்தில் மட்டுமே ஆள் நடமாட்டம் இல்லாத போது செய்துள்ளேன் என்றும் அது ஊராட்சி மன்றத்தில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது என்றால் சரியல்ல. பகலிலும் கட்டியுள்ளேன்.

64. நான் இரவு மட்டுமே கட்டிட பணி செய்தேன் என்பதற்காக வாதிகள் தரப்பில் ஊராட்சி மன்றத்தில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவின் பதிவுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

65. எனவே வாதி காவல்துறை தலைவர், தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவு உள்ளிட்டவர்களுக்கு புகார் மனு அனுப்பு அதன் நகல் வாதி தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

66. என் ஆக்கிரமிப்பு கட்டுமானத்தால் மகா சிவராத்திரி முடிந்து 8 ம் நாள் பூஜை கோமரத்தார்களால் நடத்த இயலவில்லை என்றால் அவ்வாறு எந்த பூஜையும் நடைபெறவில்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் மகா சிவராத்திரி முடிந்த 8 ம் நாளில் ஆண்டாண்டு காலமாக பூஜை நடந்து வருவது வழக்கம் என்றால் சரியல்ல.

67. என் ஆக்கிரமிப்பு கட்டுமானத்தால் வாதிகளின் வழிபாட்டு உரிமை பாதிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக நான் சுவற்றை அகற்றி வாதிகளின் வழிபாட்டு உரிமையை உறுதி செய்ய சட்ட கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

68. வாதிகளின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.